**நவம்பர் – 11**

# TNPSC துளிகள்

- ஜம்மு-காஷ்மீரைச் சேர்ந்த மாற்றுத் திறனாளி வில்வித்தை வீராங்கனை ஷீத்தல் தேவி, சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் நடைபெறும் 2025 ஆம் ஆண்டு ஆசியக் கோப்பை போட்டி - நிலை 3 என்ற சர்வதேசப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் இந்திய மாற்றுத் திறனாளித் தடகள வீராங்கனை என்ற பெருமையினைப் பெற்று உள்ளார்.
- இமாச்சலப் பிரதேச மாநிலமானது, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்திடமிருந்து (MeitY) "People First Integration Award" என்ற விருதினைப் பெற்று உள்ளது.
- இந்திய சதுரங்க வீரர் V. S. ராகுல் 6வது ஆசியான் தனிநபர் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்றதையடுத்து நாட்டின் 91வது கிராண்ட்மாஸ்டர் ஆனார்.
- சீனாவின் 3வது மற்றும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்ட முதல் விமானந் தாங்கி கப்பலான ஃபுஜியன், விரிவான கடல் சோதனைகளுக்குப் பிறகு அதிகாரப்பூர்வமாக படையில் இணைக்கப்பட்டுள்ளது.
- அருணாச்சலப் பிரதேசத்தின் மியாவோவில் உள்ள நம்தாபா தேசியப் பூங்கா மற்றும் புலிகள் வளங்காப்பகத்தில் (NNP &TR) 8வது நம்தாபா வண்ணத்துப் பூச்சி திருவிழா ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தி அமைப்புகளின் நிறுவல்




- தமிழ்நாட்டில் மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தி அமைப்புகள் நிறுவப்படுவது குறைவாகவே உள்ளது.
- வருடாந்திர மின்சாரத் தேவையில் மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தியின் பரவல்

தமிழ்நாட்டில் 1.55%, கேரளாவில் 8.07% மற்றும் குஜராத்தில் 6.43% ஆக உள்ளது.

- நிறுவப்பட்ட மொத்த மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தித் திறன் தமிழ்நாட்டில் 1.13GW, கேரளாவில் 1.44GW மற்றும் குஜராத்தில் 5.84GW ஆகும்.
- பிரதமர் சூர்யா கர் மற்றும் கிசான் உர்ஜா சுரக்சா ஏவம் உத்தான் மகாபியான் (KUSUM-C) போன்ற தேசிய அளவிலான திட்டங்கள் வீடுகள் மற்றும் விவசாயிகளுக்கு 60% வரை மானியங்கள் மற்றும் சலுகைக் கடன்களை வழங்குகின்றன.
- 1kW அளவிலான திறன் கொண்ட மேற்கூரை சூரிய சக்தி மின் உற்பத்தி அமைப்பிற்கு, இந்த அமைப்பு ஒரு நாளைக்கு சுமார் 5 அலகு மின்சாரம் என்ற கணக்கில் சராசரியாக மாதத்திற்கு 150 அலகுகள் உற்பத்தி செய்ய முடியும்.

# தேசியச் செய்திகள்

## மிஹிர் ராஜேஷ் ஷா மற்றும் மகாராஷ்டிரா மாநில அரசு இடையிலான வழக்கு





- மிஹிர் ராஜேஷ் ஷா மற்றும் மகாராஷ்டிரா மாநில அரசு இடையிலான வழக்கில் உச்ச நீதிமன்றம், கைதுக்கான எழுத்துப்பூர்வ காரணங்களை வழங்கத் தவறினால் அந்த கைது நடவடிக்கை சட்டவிரோதமானதாகும் என்று கூறி தீர்ப்பளித்தது.
- குற்றம் சாட்டப்பட்டவரை ஒரு நீதிபதி முன் சமர்ப்பிப்பதற்கு குறைந்தது இரண்டு மணி நேரத்திற்கு முன்பே எழுத்துப்பூர்வ காரணங்களை வழங்க வேண்டும்.
- கைது செய்யப்பட்ட நபருக்குப் புரியும் மொழியில் தகவல் வழங்கப்பட வேண்டும்.
- இந்தத் தீர்ப்பு ஆனது முறையே தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் கைதுக்கான காரணங்களைத் தெரிவிக்கும் உரிமையை உறுதி செய்கின்ற அரசியலமைப்பின் 21 மற்றும் 22(1) ஆகிய சரத்துகளை ஆதரிக்கிறது.
- இந்தத் தீர்ப்பு ஆனது பாரதிய நியாய சன்ஹிதாவின் (BNS) கீழ் உள்ளவை உட்பட அனைத்து குற்றங்களுக்கும் பொருந்தும்.

## டிஜி பந்தர்

- அனைத்து துறைமுகங்களையும் தரவு சார்ந்ததாகவும், செயற்கை நுண்ணறிவு மூலம்

இயக்கப்பட்டதாகவும், ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாகவும் மாற்றுவதற்காக "டிஜி பந்தர்" எனும் ஒரு தேசியக் கட்டமைப்பினை இந்தியா அறிமுகப்படுத்தியுள்ளது.

- இந்த அமைப்பு ஆனது, சரக்குக் கண்காணிப்பை மேம்படுத்தவும் தாமதங்களைக் குறைக்கவும் செயற்கை நுண்ணறிவு (AI), தொடர் சங்கிலித் தொழில்நுட்பம் மற்றும் இணைய உலகம் (IoT) ஆகிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது.
- துறைமுகச் செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் துறைமுக அதிகாரிகள், சுங்கம் மற்றும் தளவாடச் சேவை வழங்கீட்டாளர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதே டிஜி பந்தர் கட்டமைப்பின் நோக்கமாகும்.




## புதிய IIP மையம்





- பொதிகளுக்கான புதிய கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சியை வலுப்படுத்த இந்திய பொதி நுட்ப ஆய்வு நிறுவனம் (IIP) ஆனது சமீபத்தில் அதன் பெங்களூரு மையத்தைத்

திறந்துள்ளது.

- இது இந்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படுகிறது.
- இது மும்பையில் அதன் தலைமையகம் மற்றும் முதன்மை ஆய்வகங்களுடன் 1966 ஆம் ஆண்டு மே 14 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.
- புதுமையான பொதி வடிவமைப்பு, சோதனை மற்றும் மேம்பாடு மூலம் ஏற்றுமதியை ஊக்குவிப்பதே அதன் முக்கிய நோக்கமாகும்.
- IIP ஆனது ஆசிய பொதி நுட்பங்கள் கூட்டமைப்பின் (APF) ஒரு நிறுவன உறுப்பினராகும் என்பதோடு உலகளாவியப் பொதி அமைப்புகளுடன் கூட்டுறவினை மேற்கொள்கிறது.


## AI கல்வி புரட்சியில் இந்தியா முதலிடம்

- 2 மில்லியனுக்கும் அதிகமான மாணாக்கர்கள் பயன்படுத்துவதுடன் கூகுள் ஜெமினியின் வழிகாட்டப்பட்ட கற்றல் அம்சத்தின் உலகளவிலான ஏற்பில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.
- திறனாய்வுச் சிந்தனை மற்றும் உள்ளார்ந்த கற்றலை ஊக்குவிக்க AI ஆசிரிய நுட்பம் சாக்ரடிக் கேள்வி முறைகளைப் பயன்படுத்துகின்றது.
- இந்தக் கருவியைப் பயன்படுத்திய பிறகு சுமார் 95% இந்திய மாணாக்கர்கள் தன்னம்பிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.
- ஜெமினி, எட்டு இந்திய மொழிகளில் சேவை வழங்குகிறது என்பதோடு மேலும் STEM மற்றும் படைப்பாக்கப் பாடங்களில் மாணாக்கர்களுக்கு உதவுகிறது.
- கூகுளின் புதிய LearnLM மாதிரி மேம்பட்ட கற்றல் அறிவியல் கொள்கைகளைப் பயன்படுத்தி இந்த அம்சங்களை மேம்படுத்துகிறது.



# சர்வதேசச் செய்திகள்

## மினிட்மேன் III




- ❖ அமெரிக்கா, கலிபோர்னியாவிலிருந்து பசிபிக் சோதனை தளம் வரையிலான 6,700 கிலோ மீட்டர் தூரத்திற்கு மினிட்மேன் III என்ற கண்டம் விட்டு கண்டம் பாயும் உந்து விசை எறிகணையை (ICBM) பரிசோதனை செய்துள்ளது.
- ❖ இந்த எறிகணை 10,000 கிலோமீட்டருக்கும் அதிகமான தாக்குதல் வரம்பைக் கொண்டு உள்ளது.
- ❖ அமெரிக்காவும் ரஷ்யாவும் இணைந்து 10,600க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளன, அதே நேரத்தில் சீனாவின் அணு ஆயுத எண்ணிக்கை சுமார் 600 போர் ஆயுதங்களாக அதிகரித்துள்ளது.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## காப்புரிமை அற்ற லுகேமியா மருந்து – டசாடினிப்

- ❖ அலெம்பிக் பார்மாசூட்டிகல்ஸ் என்ற நிறுவனமானது அதன் பொதுப் பெயர் மருந்தான டசாடினிப் மாத்திரைகளுக்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகத்திடமிருந்து (USFDA) இறுதி ஒப்புதலைப் பெற்றுள்ளது.
- ❖ பெரியவர்கள் மற்றும் குழந்தைகளில் பிலடெல்பியா குரோமோசோம்-பாசிட்டிவ் நாட்பட்ட மைலாய்டு லுகேமியா (நாள்பட்ட எலும்பு மஜ்ஜை புற்றுநோய்) மற்றும் மிகக் கடுமையான லிம்போபிளாஸ்டிக் லுகேமியா (கடும் நிணநீர்க் குழியப் புற்றுநோய்) ஆகியவற்றிற்குச் சிகிச்சையளிக்க வேண்டி டசாடினிப் மாத்திரைகள் பயன்படுத்தப் படுகின்றன.
- ❖ லுகேமியாவின் நாள்பட்ட, துரிதப்படுத்தப்பட்ட அல்லது தீவிரமான கட்டங்களில் இமாடினிப் உள்ளிட்ட முந்தைய சிகிச்சைக்கான எதிர்ப்புத் திறன் அல்லது சகிப்புத் திறன் இல்லாத நோயாளிகளுக்கு டசாடினிப் வழங்க பரிந்துரைக்கப் படுகிறது.




## குழந்தைகளுக்கான முதல் IBS-C மருந்து – லின்செஸ்





- மலச்சிக்கலுடன் கூடிய குடல் எரிச்சல் நோய்க்குறி (IBS-C) உள்ள ஏழு வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு லின்செஸ் (லினாக்ளோடைடு) வழங்க USFDA அங்கீகரித்துள்ளது.
- IBS-C உள்ள குழந்தைகளுக்கான FDA-அங்கீகரிக்கப்பட்ட முதல் சிகிச்சை இதுவாகும்.
- லின்செஸ் குடல் இயக்கச் சுழற்சிகளை மேம்படுத்துகிறது மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளில் வயிற்று வலியைக் குறைக்கிறது.
- கடுமையான நீரிழப்பு ஆபத்து காரணமாக இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு லின்செஸ் அனுமதிக்கப்படவில்லை.

## வலிமையான புவி காந்தப் புயல் 2025

- புவியானது, G5 நிகழ்வாக வகைப்படுத்தப்பட்டுள்ள இந்த ஆண்டின் வலிமையான புவி காந்தப் புயலை எதிர் கொண்டு வருவதாக நாசா உறுதிப்படுத்தியது.

- புவியை அடைவதற்கு முன்பு ஒரு பெரிய பிளாஸ்மா அலையில் இணைந்த சூரிய வெப்ப உமிழ்வுகள் (CMEs) எனப்படும் பல சூரிய வெடிப்புகளால் இந்தப் புயல் தூண்டப் பட்டது.
- இந்த நிகழ்வு ஆனது வடக்கு ஐரோப்பா, கனடா, அமெரிக்கா மற்றும் ஐக்கியப் பேரரசு முழுவதும் பரவலான துருவ மின்னொளி (அரோரா) காட்சிகளை ஏற்படுத்தியது.
- அறிவியலாளர்கள், புவியின் வளைய மின்னோட்டக் (Disturbance Storm Time-Dst) குறியீட்டில் கூர்மையான வீழ்ச்சியைக் கவனித்தனர், இது அதிகப் புவி காந்தச் செயல்பாட்டைக் குறிக்கிறது.
- இந்தப் புயல், 2003 ஆம் ஆண்டின் "ஹாலோவீன் புயல்கள்" போலவே செயற்கைக் கோள் தகவல் தொடர்பு, GPS அமைப்புகள் மற்றும் மின் பகிர்மானக் கட்டமைப்புகளில் இடையூறினை ஏற்படுத்தியது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### தூத்துக்குடி உப்பளங்களில் அரிவாள் மூக்கன்




- தமிழ்நாட்டின் தூத்துக்குடியின் உப்பளங்களில் கருந்தலை அரிவாள் மூக்கன்

(த்ரெஸ்கியோர்னிஸ் மெலனோசெபாலஸ்) பறவைக் கூட்டம் காணப்பட்டது.

- கருந்தலை அரிவாள் மூக்கன், IUCN அமைப்பினால் அச்சுறுத்தல் நிலையை அண்மித்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தப் பறவைகள் ஈரநிலங்கள் மற்றும் ஆற்றங்கரைகளில் மீன், பூச்சிகள், இரு வாழ்விகள் மற்றும் சிறிய நீர்வாழ் உயிரினங்களை உண்கின்றன.
- உப்பளங்களானது, வடகிழக்குப் பருவமழை காலத்தில் வலசை போகும் மற்றும் அங்கேயே வசிக்கும் பறவைகளுக்கு முக்கியமான வாழ்விடத்தை வழங்குகின்றன.


## புதிய வனப் பாதுகாப்பு நிதி




- COP30 மாநாட்டிற்கு முன்னதாக, வெப்பமண்டல வனங்கள் பாதுகாப்பு மையத்தின் (Tropical Forest Forever Facility-TFFF) பார்வையாளராக இந்தியா இணைய உள்ளது.
- TFFF ஆனது, ஆண்டுதோறும் பாதுகாக்கப்படும் காடுகளுக்கு ஒரு ஹெக்டேருக்கு 4 டாலர் வழங்குகின்ற ஒரு நடுநிலையான நிதி ஒதுக்கீட்டு இயற்கை நிதி மாதிரியை வழங்குகிறது.
- முதலீட்டாளர்களின் பங்களிப்புகள் ஆனது, அதிகரித்து வரும் சந்தைப் பத்திரங்களுக்கு நிதியளிக்கவும் புதைபடிவ எரிபொருட்களைத் தவிர்க்கவும் வெப்ப மண்டல வன முதலீட்டு நிதியத்தால் (TFIF) நிர்வகிக்கப்படுகின்றன.
- பிரேசில், இந்தோனேசியா, நார்வே, கொலம்பியா, நெதர்லாந்து மற்றும் போர்ச்சுகல் ஆகியவை இந்த நிதிக்கு நிதி உதவி செய்துள்ளன.
- இந்தியா 2005 முதல் 2020 ஆம் ஆண்டு வரை அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உமிழ்வுச் செறிவினை சுமார் 36% குறைத்து, 50% புதைபடிவமற்ற நிறுவப்பட்ட மின் உற்பத்தித் திறனை அடைந்துள்ளது.
- 2005 மற்றும் 2021 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், இந்தியாவின் காடு மற்றும் மரப் பரவலின் விரிவாக்கம் ஆனது 2.29 பில்லியன் டன் $CO_2$ வாயுவிற்குச் சமமான கூடுதல் கார்பன் பிடிப்பு பகுதியை உருவாக்கியது.

## செம்முகக் குரங்கு வளங்காப்பு

- தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழுவானது, 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் இரண்டாவது அட்டவணையின் கீழ் செம்முகக் குரங்குகளை (ரீசஸ் மக்காக்) மீண்டும் சேர்ப்பதற்குப் பரிந்துரைத்துள்ளது.
- இரண்டாம் அட்டவணையில் இதனை மீண்டும் சேர்ப்பது சட்டப்பூர்வப் பாதுகாப்பை மீண்டும் கொண்டு வரும் மற்றும் அந்த இனங்களின் மீதான அறிவியல் பூர்வ மேலாண்மையை ஒழுங்குபடுத்தும்.
- இந்த நடவடிக்கையானது அவற்றைச் சட்டவிரோதமாக பிடிப்பது, கொடுமைப் படுத்துதல் மற்றும் மோசமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றினைத் தடுப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- மத்தியப் பிரதேசம், குஜராத், உத்தரகாண்ட், மேற்கு வங்காளம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் உள்ளிட்ட ஆறு மாநிலங்கள் இந்தப் பரிந்துரையை ஆதரிக்கின்றன.
- இந்த உயிரினங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகவில்லை என்றும், மோதல் மேலாண்மை காரணங்களுக்காகவும், மற்ற மாநிலங்கள் இந்தத் திட்டத்தை எதிர்த்தன.
- ஒரு குறிப்பிட்டத் தளம் சார்ந்த மேலாண்மை மற்றும் வளங்காப்புத் திட்டங்களைக் கோட்ட வன அதிகாரிகள் மற்றும் வனத் துணை வளங்காவலர்கள் தயாரிக்க வேண்டும்.




## மூன்று ஆண்டு கால உலகளாவிய உச்சநிலை வெப்பம்- 2023/2025

- உலக வானிலை அமைப்பு (WMO) ஆனது, 2023–2025 ஆம் ஆண்டுகளானது இது வரை பதிவு செய்யப்பட்டவற்றுள் மிகவும் வெப்பமான மூன்று ஆண்டு காலக் கட்டமாக உறுதிப் படுத்தியது.
- இந்தக் காலக் கட்டத்தில் உலக வெப்பநிலைத் தொழில்துறைக்கு முந்தைய கால அளவை விட சராசரியாக 1.4°C அதிகமாக இருந்தது.
- ஆர்க்டிக் கடல் பனி அதன் மிகக் குறைந்த குளிர்கால அளவை எட்டிய அதே நேரத்தில் அண்டார்டிக் பனிப் பரவல் சராசரியை விட குறைவாகவே இருந்தது.

- 1990 ஆம் ஆண்டுகளில் ஆண்டிற்கு 2.1 மில்லி மீட்டராக இருந்த கடல் மட்ட உயர்வு 2016 முதல் ஆண்டுதோறும் 4.1 மில்லிமீட்டராக அதிகரித்தது.
- 2023–2024 ஆம் ஆண்டு வரையிலான பனிப்பாறை இழப்பு 450 ஜிகா டன்களை எட்டியது என்பதோடு இது 1.2 மில்லிமீட்டர் கடல் மட்ட உயர்வுக்குப் பங்களித்தது.
- கார்பன் டை ஆக்சைடு ($CO_2$) செறிவு 2024 ஆம் ஆண்டில் 423.9 பாகங்களுக்கு ஒரு மில்லியன் என்ற அளவினை எட்டியது என்பதோடு இது தொழில்துறைக்கு முந்தைய காலங்களை விட 53% அதிகரிப்பு ஆகும்.




## சியாங் பள்ளத்தாக்கில் புதிய வண்ணத்துப்பூச்சி இனங்கள்





- இந்தியாவில் முதல் முறையாக அருணாச்சலப் பிரதேசத்தின் சியாங் பள்ளத்தாக்கில் இருந்து ஆறு வண்ணத்துப் பூச்சி இனங்கள் பதிவு செய்யப்பட்டன.

- இந்த இனங்களாவன லிட்டின் ஓனிக்ஸ் (ஹொராகா தகனாமி), திபெத்திய ஜங்கிள் குயின் (ஸ்டிச்சோஃப்தால்மா நியூமோஜெனி ரென்கிங்டுயோஜி), மற்றும் திபெத்திய டியூக் (யூதாலியா ஜாக்சிடுன்சுய்) என்பதோடு, மேலும் லாவோஸ், வியட் நாம் மற்றும் தென்கிழக்கு திபெத்தில் மட்டுமே உள்ள முன்னர் அறியப்பட்ட மூன்று இனங்கள் ஆகியவையாகும்.
- இந்தக் கண்டுபிடிப்புகள் திபெத்தின் யார்லுங் சாங்போ நதிக்கும் இந்தியாவின் பிரம்ம புத்திரா நதிப் படுகைக்கும் இடையிலான சுற்றுச்சூழல் தொடர்பை எடுத்துக் காட்டுகின்றன.

## புலிகள் கணக்கெடுப்பு 2026

- உலகின் மிகப்பெரிய வனவிலங்குக் கணக்கெடுப்பான 2026 ஆம் ஆண்டு அகில இந்தியப் புலிகள் கணக்கெடுப்பிற்கான (AITE) தயாரிப்புகளை இந்தியா தொடங்கி உள்ளது.
- 2022 ஆம் ஆண்டின் கடைசி கணக்கெடுப்பில் 3,682 புலிகள் பதிவாகியுள்ளன என்பதோடு இது உலகளாவிய வனப் புலிகளின் எண்ணிக்கையில் சுமார் 75% ஆகும்.
- 2022 ஆம் ஆண்டில் 563 புலிகள் பதிவு செய்யப்பட்டதுடன் இந்திய மாநிலங்களில் கர்நாடகா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- இந்தக் கணக்கெடுப்பு 20க்கும் மேற்பட்ட மாநிலங்களில் சுமார் 400,000 சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான காடுகளில் மூன்று கட்டங்களாக நடைபெறும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 2025 ஆம் ஆண்டில் அதிக கடன்பட்ட நாடுகள்

- ஜப்பான் 222.2 சதவீதம் என்ற உலகின் மிக அதிக கடன்-GDP விகிதத்தைக் கொண்டு உள்ளது.
- சூடான் 222.1 சதவீதத்துடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.

- அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் (175.6), கிரீஸ் (146.7), மற்றும் பஹ்ரைன் (142.5) உள்ளன.
- மிகப்பெரிய உலகளாவியப் பொருளாதாரமான அமெரிக்கா, 125 சதவீதம் என்ற அதிக கடன்- GDP விகிதத்துடன் உலகளவில் எட்டாவது இடத்தில் உள்ளது.
- சீனா மற்றும் இந்தியா ஆகியவை முறையே 96.3 சதவீதம் மற்றும் 81.4 சதவீதம் என்ற பொதுக் கடன் விகிதங்களைக் கொண்டுள்ளன.

| Rank | Country | Debt-to-GDP Ratio (%) |
|---|---|---|
| 1 | Japan | 229.6 |
| 2 | Sudan | 221.5 |
| 3 | Singapore | 175.6 |
| 4 | Greece | 146.7 |
| 5 | Bahrain | 142.5 |
| 6 | Italy | 136.8 |
| 7 | Maldives | 131.8 |
| 8 | United States | 125 |
| 9 | Senegal | 122.9 |
| 10 | France | 116.5 |

## உலகப் பொருளாதார மன்ற அறிக்கை 2025




- உலகப் பொருளாதார மன்றம் (WEF) ஆனது, "Shaping the Deep-Tech Revolution in Agriculture" என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கை WEF மன்றத்தின் வேளாண்மைக்கான செயற்கை நுண்ணறிவு முன்னெடுப்பு (AI for Agriculture Initiative-AI4AI) என்ற முன்னெடுப்பின் கீழ் தயாரிக்கப் பட்டது.
- உமிழ்வு குறைப்புக்கள் இல்லாவிட்டால் 2100 ஆம் ஆண்டிற்குள் பிரதானமானப் பயிர் விளைச்சல் 24% குறையக்கூடும் என்று இந்த அறிக்கை எச்சரிக்கிறது.

- வேளாண்மையானது தற்போது நன்னீரில் 70 சதவீதத்தினைப் பயன்படுத்துகிறது என்பதோடு மேலும் 71% நீர்நிலைகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.
- உலகளாவிய மண்ணில் மூன்றில் ஒரு பங்கு தரமிழந்துள்ளது என்பதோடு மேலும் 90% மேற்பரப்பு மண் 2050 ஆம் ஆண்டிற்குள் தரமிழக்கக்கூடும்.

# மாநிலச் செய்திகள்

## ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுப்புக்கான கொள்கை - கர்நாடகா

- பெண் ஊழியர்களுக்கு மாதத்திற்கு ஒரு நாள் ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் விடுப்பு வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக கர்நாடகா மாறியுள்ளது.
- இந்தக் கொள்கை ஆண்டிற்கு 12 நாட்கள் விடுப்புடன் அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கும் பொருந்தும்.
- ஒடிசா மற்றும் பீகார் ஆகிய மாநில அரசுகள், அரசு ஊழியர்களுக்கு மட்டுமே இது போன்ற கொள்கைகளைக் கொண்டுள்ளன என்ற அதே நேரத்தில் கேரளா பல்கலைக் கழகங்களில் இதைச் செயல்படுத்தியுள்ளது.





# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஜேம்ஸ் வாட்சன் மறைவு


- அமெரிக்க மூலக்கூறு உயிரியலாளர் ஜேம்ஸ் டீவே வாட்சன் காலமானார்.
- பிரான்சிஸ் கிரிக்குடன் சேர்ந்து, டிஆக்ஸிரைபோநியூக்ளிக் அமிலத்தின் (டிஎன்ஏ) இரட்டை - சுருள் அமைப்பைக் கண்டுபிடித்தவராக அவர் பாராட்டப்பட்டார்.
- வாட்சன், கிரிக் மற்றும் மாரிஸ் வில்கின்ஸ் ஆகியோர் தங்கள் கண்டுபிடிப்புக்காக 1962 ஆம் ஆண்டு உடலியல் அல்லது மருத்துவத்திற்கான நோபல் பரிசை இணைந்து வென்றனர்.

- பின்னர் அவர் கோல்ட் ஸ்பிரிங் ஹார்பர் ஆய்வகத்தின் வேந்தரானார் மற்றும் 2008 ஆண்டில் தனது சொந்த டிஎன்ஏவின் ஆறு பில்லியன் அடிப்படை இணைகளை வரிசைப் படுத்தி, மனித ஜீனோம் திட்டத்திற்கு பங்களித்தார்.
- அவர் The Double Helix என்ற புத்தகத்தை எழுதினார் என்பதோடு மேலும் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தில் கல்வி கற்பித்ததோடு பல்வேறு தலைமுறைகளைச் சார்ந்த மரபியலாளர்களுக்கு தனது அறிவினைப் பகிர்ந்தார்.




# முக்கிய தினங்கள்

## உலக கதிர்வரைவியல் மற்றும் கதிரியக்கவியல் தினம் 2025 - நவம்பர் 08




- சுகாதாரப் பராமரிப்பில் கதிரியக்கவியல் மற்றும் கதிரியக்கவியலாளர்களின் பங்கு குறித்து உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இந்நாள் நோக்கமாகக்

கொண்டுள்ளது.

- இந்த நாள் முதன்முதலில் 2007 ஆம் ஆண்டில் சர்வதேச கதிரியக்கவியலாளர்கள் மற்றும் கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தால் கொண்டாடப்பட்டது.
- இது 1895 ஆம் ஆண்டு நவம்பர் 08 ஆம் தேதியன்று வில்ஹெல்ம் கான்ராட் ரோன்ட்ஜென் என்பவரால் X -கதிர்கள் கண்டறியப்பட்டதை நினைவு கூரும்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Radiographers: Seeing the Unseen" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★